www.Padasalai.Net www.CBSEtips.in

# முதல் பருவ தொகுத்தறித் தேர்வு - 2022

6 - ஆம் வகுப்பு

## சமூக அறிவியல்

நேரம் : 2.00 மணி

மதிப்பெண்கள் : 60

**I சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.** 6 X 1 = 6

1. பழங்கால மனிதன் தனது உணவைச் சேகரிக்க மேற்கொண்ட நடவடிக்கை
   அ) வணிகம் ஆ) வேட்டையாடுதல்
   இ) ஓவியம் வரைதல் ஈ) விலங்குகளை வளர்த்தல்
2. பரிணாமத்தின் விதிமுறை ...................... .
   அ) நேரடியானது ஆ) மறைமுகமானது இ) படிப்படியானது ஈ) விரைவானது
3. சிந்துவெளி நாகரிகம் எக்காலத்தைச் சார்ந்தது .................. .
   அ) பழையகற்காலம் ஆ) இடைக் கற்காலம்
   இ) புதிய கற்காலம் ஈ) உலோக காலம்
4. புவி தன் அச்சில் சுழல்வதை இவ்வாறு அழைக்கிறோம் .................. .
   அ) சுற்றுதல் ஆ) பருவகாலங்கள் இ) சுழல்தல் ஈ) ஓட்டம்
5. அதிகமான கப்பல் போக்குவரத்து நடைபெறும் பெருங்கடல் ................ .
   அ) பசிபிக் பெருங்கடல் ஆ) அட்லாண்டிக் பெருங்கடல்
   இ) இந்தியப்பெருங்கடல் ஈ) ஆர்டிக் பெருங்கடல்
6. இந்தியா ஒரு ...................... என்று அழைக்கப்படுகிறது.
   அ) கண்டம் ஆ) துணைக்கண்டம் இ) தீவு ஈ) இவற்றில் எதுவுமில்லை
7. **கொடுக்கப்பட்டுள்ள கூற்றுகளை ஆராய்ந்து, சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக.** 4 X 1 = 4
   **கூற்று :** ஹரப்பா நாகரிகம் வெண்கல காலத்தைச் சார்ந்தது.
   **காரணம் :** ஹரப்பா மக்களுக்கு இரும்பின் பயன் தெரியாது.
   அ) கூற்றும், காரணமும் சரி ஆ) கூற்று தவறானது, காரணம் சரி
   இ) கூற்று சரி, காரணம் தவறு ஈ) கூற்று மற்றும் காரணம் தவறானவை
8. **கூற்று -1 :** புவி, நீர்கோளம் என அழைக்கப்படுகிறது.
   **கூற்று -2 :** புவி தன் அச்சில் சுழலுவதால் பருவ காலங்கள் ஏற்படுகின்றன.
   அ) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு ஆ) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி
   இ) இரண்டு கூற்றுகளும் சரி ஈ) இரண்டு கூற்றுகளும் தவறு
9. **சரியான இணையைக் கண்டறிக.**
   அ) கடல் நகர் - பூம்புகார் ஆ) கல்வி நகரம் - மதுரை
   இ) தூங்கா நகரம் - ஹரப்பா ஈ) கோயில் நகரம் - காஞ்சிபுரம்
10. **பெயரிடுக.** பிரகாசமான கோள் ...................... .

**II கோடிட்ட இடத்தை நிரப்புக.** 5 X 1 = 5

11. பழைய கற்கால மனிதன் பழக்கிய முதல் விலங்கு .................. .
12. சூரியக் குடும்பத்தின் மையம் ........... .
13. உலகின் மிகப்பெரிய கண்டம் .................. .
14. சுதந்திர இந்தியாவின் முதல் சட்ட அமைச்சர் ................ .
15. தமிழ் செம்மொழியாக அறிவிக்கப்பட்ட ஆண்டு .................. .



www.Padasalai.Net

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

CamScanner

**III சரியா, தவறா என எழுதுக.** 4 X 1 = 4

16. அசோகரது காலத்தில் புத்த சமயம் நாடு முழுவதும் பரவியது.
17. நாணயங்களை ஆராய்வதற்கான துறை மானுடவியல் ஆகும்.
18. தானியக் களஞ்சியம் தானியங்களைச் சேகரித்து வைப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டது.
19. போதி தர்மர் காஞ்சிபுரத்தைச் சேர்ந்தவர்.

**IV பொருத்துக.** 5 X 1 = 5

20. எழுதப்பட்ட பதிவுகள் - செவ்வாய்
21. கார்னிலியன் - பசிபிக் பெருங்கடல்
22. செந்நிறக்கோள் - இந்தியா
23. மரியானா அகழி - சிவப்புமணிக்கல்
24. வேற்றுமையில் ஒற்றுமை - செப்பு தகடுகள்

**V ஓரிரு வார்த்தைகளில் விடையளிக்கவும்.** 5 X 1 = 5

25. நாட்குறிப்பு எழுதுவதன் பயன் ஒன்றைக் கூறுக.
26. தொடக்ககால மனிதர்கள் எதை அணிந்தார்கள்?
27. ஏதேனும் ஒரு காப்பியத்தின் பெயரை எழுதுக.
28. உலகின் உயரமான பீடபூமி எது?
29. ஒரு நாட்டின் பெயரைக் கொண்டுள்ள பெருங்கடல் எது?

**VI சுருக்கமான விடையளி. (ஏதேனும் ஏழு மட்டும்)** 7 X 2 = 14

30. வரலாறு என்றால் என்ன?
31. பாறைகளில் ஓவியங்கள் ஏன் வரையப்பட்டன?
32. கோட்டைகள் ஏன் உருவாக்கப்பட்டன?
33. பெருங்குளம் பற்றி உனக்கு தெரிந்தவற்றைக் கூறுக.
34. தமிழகத்தின் பண்டைய நகரங்களைக் குறிப்பிடுக.
35. உட்புறக்கோள்களைப் பெயரிடுக.
36. கண்டம் என்றால் என்ன?
37. வட, தென் அமெரிக்காவைச் சூழ்ந்துள்ள பெருங்கடல்கள் எவை?
38. பன்முகத் தன்மையினை வரையறு.
39. பாகுபாடு என்றால் என்ன?

**VII விரிவான விடை தருக. (ஏதேனும் நான்கு மட்டும்.)** 4 X 3 = 12

40. பழைய கற்கால மனிதனின் வாழ்க்கை முறையைத் தற்கால வாழ்க்கை முறையோடு ஒப்பிட்டுப்பார்.
41. ஹரப்பா நாகரிகத்தின் அழிவுக்கு காரணம் என்ன?
42. பூம்புகாரின் வணிகம் பற்றி ஒரு பத்தியளவில் எழுதுக.
43. இந்தியா வேற்றுமையில் ஒற்றுமை நிலவும் நாடு என ஏன் அழைக்கப்படுகிறது?
44. புவியின் சுழலுதல் மற்றும் சுற்றுதல் நிகழ்வுகளால் ஏற்படும் விளைவுகள் யாவை?
45. நிலத்தோற்றத்தின் வகைகளை விளக்கி எழுதுக.
46. பாரபட்சத்திற்கான காரணங்களைக் கூறுக.

**VIII இந்திய வரைபடத்தில் கீழ்க்கண்ட இடங்களை குறிக்கவும்.** 5 X 1 = 5

1) அத்திரம்பாக்கம் 2) ஆதிச்சநல்லூர் 3) பிம்பேட்கா 4) லோத்தல் 5) புர்ஜஹோம்



Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593 CamScanner